# SHANMUGAM IAS ACADEMY®

ISO 9001:2015

YOU DREAM...! OUR RESPONSE...!












# நடப்பு நிகழ்வுகள்

## ஏப்ரல் 5 , 2022

# சர்வதேசம்

## பாகிஸ்தான் இடைக்கால பிரதமராக – முன்னாள் தலைமை நீதிபதி குல்சார் அகமது

### சுருக்கம்:



- பாகிஸ்தானில் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டுள்ள நிலையில், அந்நாட்டின் இடைக்கால பிரதமர் பதவிக்கு முன்னாள் தலைமை நீதிபதி குல்சார் அகமதுவின் பெயரை பிரதமர் இம்ரான் கான் பரிந்துரை செய்துள்ளார்.
- பாகிஸ்தான் பிரதமராக இருந்த இம்ரான் கான் அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானத்தை நாடாளுமன்ற துணை சபாநாயகர் காசிம் சூரி நிராகரித்தார். தொடர்ந்து இம்ரான் கானின் பரிந்துரையின் பேரில் நாடாளுமன்றத்தை கலைப்பதாக அந்நாட்டு ஜனாதிபதி ஆரிப் ஆல்வி அறிவித்தார்.
- அடுத்த 90 நாட்களில் தேர்தலை நடத்த உத்தரவிட்டுள்ளார். அதையடுத்து அடுத்த தேர்தலுக்கான ஏற்பாடுகள் நடந்து வருகின்றன.

### முக்கிய சிறப்பம்சங்கள்:

- நாடாளுமன்ற தேர்தல் நடத்தி முடிக்கப்பட்டு, அடுத்த பிரதமர் பதவியேற்கும் வரை இம்ரான் கான் தற்காலிக பிரதமராக இருப்பார் என்று தகவல்கள் தெரிவித்தன.
- நாடாளுமன்றத்தை கலைத்தது சட்டவிரோதமானது என்று உச்சநீதிமன்றத்தில் வழக்கும் தொடரப்பட்டுள்ளது. இன்றைய நிலையில் ஒட்டுமொத்த ஆட்சி நிர்வாகமும் அரசியலமைப்பு விதிகளின் படி தொடங்கியுள்ளன.
- பாகிஸ்தான் உச்ச நீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதியான குல்சார் அகமதுவை இடைக்கால பிரதமராக நியமிக்குமாறு அதிபர் ஆரிஃப் அகமதுக்கு இம்ரான் கான் இன்று பரிந்துரைத்துள்ளார்.
- பதவியில் இருக்கும் பிரதமரின் பரிந்துரையை ஏற்று இடைக்கால பிரதமரை நியமிக்க பாகிஸ்தான் அதிபருக்கு அரசமைப்புச் சட்டம் அதிகாரம் வழங்கியுள்ளது.
- குல்சார் அகமது இடைக்கால பிரதமராக நியமிக்கப்பட்டால், அவர் முறைப்படி பதவியேற்கும் வரை பிரதமர் பதவியில் இம்ரான் கான் நீடிப்பார் தகவல் வெளியாகியுள்ளது.
- நீதிபதி உமர் அதா பண்டியல் , "நாடாளுமன்றத்தைக் கலைப்பது தொடர்பாக பிரதமர் மற்றும் அதிபரால் வெளியிடப்படும்
- அனைத்து உத்தரவுகள், நடவடிக்கைகள் நீதிமன்ற உத்தரவுக்கு உட்பட்டது" என்றார். மேலும் அரசியலமைப்பு சட்டத்திற்கு முரணான நடவடிக்கைகள் எதுவும் எடுக்க வேண்டாம் என்று அனைத்துத் தரப்பினருக்கும் உத்தரவிட்டார்.

# இந்தியா அமெரிக்கா – பேச்சுவார்த்தை

## சுருக்கம்:



- உலகின் இரண்டு பெரிய ஜனநாயக நாடுகளான அமெரிக்கா மற்றும் இந்தியா இடையேயான நட்புறவை வலுப்படுத்தும் வகையில் இரு நாட்டு வெளியுறவு மற்றும் பாதுகாப்புத்துறை அமைச்சர்கள் இடையேயான 2+2 பேச்சுவார்த்தை ஒவ்வொரு ஆண்டும் நடைபெற்று வருகிறது.
- இந்த வகையான பேச்சுவார்த்தை முறை ஜப்பானால் (Japan) தொடங்கப்பட்டது. பின்னர் உலகெங்கிலும் உள்ள பல நாடுகள் இந்த பேச்சுவார்த்தை முறையை பின்பற்றின.
- இத்தகைய பேச்சுவார்த்தைகள் பொதுவாக பாதுகாப்பு ஒத்துழைப்பை ஏற்படுத்தும் வகையில், இரு நாடுகளுக்கும் இடையில் உயர்மட்ட ராஜீய மற்றும் அரசியல் பேச்சுவார்த்தைகளை எளிதாக நடத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளன.

## முக்கிய சிறப்பம்சங்கள்:

- பேச்சுவார்த்தையின் போது பிராந்தியத்தில் உள்ள பாதுகாப்பு நிலைமை மட்டுமல்லாது, சர்வதேச விவகாரங்கள் தொடர்பாக ஆலோசனை செய்யப்படுகின்றன.
- இந்தியா மற்றும் அமெரிக்கா இடையிலான டூ பிளஸ் டூ பேச்சுவார்த்தைகள் குறித்த அறிவிப்பு 2017 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது.
- பிரதமர் நரேந்திர மோடியும் (PM Narndra Modi) , அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்பும் (Donald Trump) முதல்முறையாக சந்தித்தபோது இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டது.
- செப்டம்பர் 2018 இல், இரு நாடுகளுக்கும் இடையே முதல் இரண்டு பிளஸ் டூ பேச்சுவார்த்தைகள் ஏற்பாடு செய்யப்பட்டன. அதன் பிறகு 2019 டிசம்பரில் இதே போன்ற பேச்சு வார்த்தை நடைபெற்றது.
- இன்று முதல் நடைபெறவுள்ள பேச்சுவார்த்தை இந்தியாவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையிலான மூன்றாவது இரண்டு பிளஸ் டூ பேச்சுவார்த்தைகளாகும்.
- 2+2 பேச்சுவார்த்தை என்பது இரு நாடுகளுக்கு இடையிலான அமைச்சர்களுக்கு இடையிலான பேச்சு வார்த்தை ஆகும். குறிப்பாக, பாதுகாப்பு மற்றும் வெளியுறவு அமைச்சர்கள் பங்கேற்பார்கள்.
- இந்தியா சீனா இடையில் நிலவும் எல்லைப் பிரச்சனை, மற்றும் அமெரிக்கா சீனா இடையேயான உள்ள வர்த்தக போர் போன்ற பல்வேறு பிரச்சனைகளுக்கு மத்தியில் இந்திய அமெரிக்க வெளியுறவு அமைச்சர்கள், பாதுகாப்புத்துறை அமைச்சர்கள் இடையேயான பேச்சுவார்த்தை பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

## இலங்கையில் அனைத்துக் கட்சி அமைச்சரவை:

### சுருக்கம்:



- இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து அனைத்து அமைச்சர்களும் ராஜிநாமா செய்த நிலையில், அனைத்துக் கட்சியினரும் பங்கேற்கும் வகையில் புதிய அமைச்சரவை அமைக்க அதிபர் கோத்தபய ராஜபட்ச திங்கள்கிழமை அழைப்பு விடுத்தார்.
- இலங்கையில் கடும் பொருளாதார நெருக்கடியால் பெட்ரோல், டீசலுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டு அத்தியாவசிய பொருள்களின் விலை வரலாறு காணாத அளவுக்கு உயர்ந்துள்ளது.

### முக்கிய சிறப்பம்சங்கள்:

- பிரதமர் மகிந்த ராஜபட்ச தலைமையிலான அமைச்சரவையில் இடம்பெற்றிருந்த 26 அமைச்சர்களும் தங்கள் பதவியை ராஜிநாம செய்தனர். இதனால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.
- கடும் பொருளாதார நெருக்கடியால் சிக்கி தவித்து வரும் இலங்கையில், 26 கேபினட் அமைச்சர்களும் பதவி விலகி உள்ளனர்.
- அவர்களின் ராஜினாமாவை ஏற்ற அதிபர் கோத்தபய ராஜபக்சே, நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலைக்கு தீர்வு காணும் பொருட்டு பார்லிமென்டில் அங்கம் வகிக்கும் அனைத்து அரசியல் கட்சிகளும் அமைச்சர் பதவிகளை ஏற்று ஒன்றிணைந்து செயல்பட இலங்கை அதிபர் கோத்தபய ராஜபக்சே அழைப்பு விடுத்துள்ளார்.
- புதிய நிதியமைச்சராக அல் சப்ரி, கல்வி அமைச்சராக தினேஷ் குணவர்த்தனே, வெளிவிவகாரத்துறை அமைச்சராக ஜீ.எல்.பீரிஸ், நெடுஞ்சாலை அமைச்சராக ஜோன்ஸ்டன் பெர்னான்டோ ஆகியோர் அதிபர் கோத்தபய ராஜபக்சே முன்னிலையில் இன்று (ஏப்.,4) பதவியேற்றனர்.
- நிரந்தர அமைச்சரவை அமையும்வரை தற்காலிக அமைச்சரவை செயல்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கிடையே பொருளாதார நெருக்கடியால் இலங்கை மத்திய வங்கி கவர்னர் அஜித் நிவர்த் கேப்ரல் ராஜினாமா செய்தார்.

# தேசிய செய்திகள்

## தமிழக பொருளாதார ஆலோசனை குழுவில் 'ஐவர்'

### சுருக்கம்:



- கூட்டாட்சி நிதி வடிவம் உருவாக்கும் பொருட்டு வருவாய் மற்றும் வரி விதிப்பு (சரக்கு மற்றும் சேவை வரி உட்பட) தொடர்புடைய புகழ்பெற்ற சட்ட, பொருளாதார வல்லுநர்கள் கொண்ட ஆலோசனைக் குழுவை அரசு அமைத்துள்ளது
- தமிழ்நாடு அரசின் 2021–22 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் கூட்டாட்சி நிதி வடிவம் உருவாக்கும்பொருட்டு வருவாய் மற்றும் வரி விதிப்பு (சரக்கு மற்றும் சேவை வரி உட்பட)

தொடர்புடைய புகழ்பெற்ற சட்ட, பொருளாதார வல்லுநர்கள் கொண்ட ஆலோசனைக் குழுவை அரசு நிறுவும் என்று அறிவிக்கப்பட்டது.

### முக்கிய சிறப்பம்சங்கள்:

- தமிழகத்தின் 16வது சட்டசபையின் கூட்டத்தொடர் இன்று (ஜூன் 21) கவர்னர் உரையுடன் துவங்கியது. அதில், முதல்வருக்கான பொருளாதார ஆலோசனை குழு குறித்த தகவல்களே இப்போது 'ஹாட் டாபிக்'காக உள்ளது.
- தமிழகத்தின் பொருளாதாரம் மற்றும் நிதிநிலை மோசமான நிலையில் இருப்பதால், இந்த குழுவின் மீது அனைவரின் பார்வையும் திரும்பியுள்ளது. அதற்கு மற்றொரு காரணம், இதில் இடம்பெற்றுள்ள 5 பேர் தான்.
- அந்த அறிவிப்பின்படி, திரு.அரவிந்த் பி. டட்டார், மூத்த வழக்கறிஞர்,
- உச்சநீதிமன்றம் அவர்களின் தலைமையில் கீழ்க்கண்ட உறுப்பினர்களுடன் அரசு ஆலோசனைக் குழு ஒன்றை அமைத்துள்ளது.

1. திரு. கி . வைத்தீஸ்வரன், வழக்கறிஞர், சென்னை உயர் நீதிமன்றம்.
2. திரு. ஜி. நடராஜன், வழக்கறிஞர், சென்னை உயர் நீதிமன்றம்.
3. திரு. சுரேஷ் ராமன், துணைத் தலைவர் மற்றும் மண்டலத் தலைவர், டிசிஎஸ் – சேவைப் பிரிவு.
4. திரு. ஸ்ரீவத்ஸ் ராம், மேலாண்மை இயக்குநர், வீல்ஸ் இந்தியா லிட்.,
5. திரு. கே. வேல்முருகன், தலைவர், ஓசூர் சிறு மற்றும் குறுந்தொழிற்சாலைகள் அமைப்பு.

## நரிக்குறவர், இருளர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு இலவச வீட்டுமனை பட்டா

### சுருக்கம்:



- பூஞ்சேரியில் வசிக்கும் நரிக்குறவர், இருளர் மக்களுக்கு வீட்டுமனை பட்டா, குடும்ப அட்டைகள், வாக்காளர் அடையாள அட்டைகள். சாதிச் சான்றுகள் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்.
- செங்கல்பட்டு மாவட்டம், மாமல்லபுரம் அடுத்த பூஞ்சேரி அரசு மருத்துவமனை அருகே நரிக்குறவர்கள் மற்றும் இருளர்கள் 81 குடும்பங்கள் வசித்து வருகின்றனர். மாமல்லபுரம் ஸ்தலசயன பெருமாள் கோவிலில் தமிழக அரசின் அன்னதான திட்டத்தின்படி தினசரி அன்னதானம் வழங்கப்படுகிறது

### முக்கிய சிறப்பம்சங்கள்:

- விளிம்பு நிலையில் உள்ள 57,978 நரிக்குறவர் மற்றும் இருளர் இன மக்களுக்கும், 2,35,890 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மற்றும் 41,573 பிற்படுத்தப்பட்டோர் மக்களுக்கும் இணையவழி இலவச பட்டாக்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்.
- கடந்த காலங்களில் வருவாய்த்துறை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மூலமாக ஏற்கனவே தனிநபர்களிடம் இருந்து நிலஎடுப்பு செய்யப்பட்ட நிலங்கள் மற்றும் ஆட்சேபகரமற்ற அரசு புறம்போக்கு நிலங்கள் ஆகியவற்றில் ஆயிரக்கணக்கான பேருக்கு வீட்டுமனை பட்டா வழங்கப்பட்டிருந்தது.

- ஒரு பகுதியாக, இதுவரை சுமார் 11,873 ஹெக்டேர் ஆதிதிராவிடர் நலத்துறை நிலங்களும், சுமார் 2,668 ஹெக்டேர் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை நிலங்களும் மாவட்ட ஆட்சியர்கள் மூலமாக கண்டறியப்பட்டுள்ளன.
- ஆதிதிராவிடர் நலத்துறை சார்ந்த நிலங்களில் மொத்தம் 2,35,890 பயனாளிகளும் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை சார்ந்த நிலங்களில் 41,573 பயனாளிகளும் என மொத்தம் 2,77,463 பயனாளிகள் வீடுகட்டி வசித்து வருகிறார்கள்.
- புதிய பயனாளிகளை கண்டறியும் பணி தொடர்ந்து நடந்து வருகிறது. 31.3.2022 வரை மொத்தம் 43,911 பயனாளிகளுக்கு இணையவழி பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.
- 2022–23ம் நிதியாண்டில் தமிழக முதல்வரின் அறிவுறுத்தலுக்கிணங்க மீதமுள்ள 2,33,552 குடும்பங்களுக்கும் இணையவழி பட்டாக்கள் வழங்கப்படும்.

## 'காவல் உதவி' செயலி துவக்கம்

### சுருக்கம்:



- சென்னை–தமிழக காவல் துறை சார்பில் உருவாக்கப்பட்டு உள்ள, 'காவல் உதவி' என்ற, 'மொபைல் போன்' செயலி சேவையை, முதல்வர் ஸ்டாலின் நேற்று தலைமை செயலகத்தில் துவக்கி வைத்தார்
- குறிப்பாக பெண்கள், அவசர காலங்களில் காவல் துறை உதவியை உடனடியாக பெற வசதியாக, 60க்கும் மேற்பட்ட சிறப்பம்சங்களுடன், 'காவல் உதவி' என்ற மொபைல் போன் செயலி உருவாக்கப்பட்டுள்ளது. இது, மத்திய – மாநில காவல் துறை மொபைல் போன் செயலிகளில் முதன்மையாக விளங்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

### முக்கிய சிறப்பம்சங்கள்:

- பொதுமக்கள், குறிப்பாக பெண்கள் அவசர காலங்களில் சிவப்பு நிறத்தில் உள்ள, 'அவசரம்' என்ற பொத்தானை அழுத்த வேண்டும். அதன் வழியாக, பயனாளி விபரம், தற்போதைய இருப்பிட விபரம் மற்றும் 'வீடியோ' கட்டுப்பாட்டு அறையில் பெறப்பட்டு, காவல் துறையின் அவசர சேவை வழங்கப்படும்
- பயனாளிகள் மொபைல் போன் வழியே நேரடி புகார்களை தெரிவிக்க, 'டயல் – 100' என்ற மொபைல் போன் செயலி, காவல் உதவி மொபைல் போன் செயலி உடன் இணைக்கப்பட்டுள்ளது.
- பதிவு செய்த மொபைல் போன் எண்ணில் இருந்து அழைப்பதால், பயனாளர் விபரம் மற்றும் தற்போதைய இருப்பிட விபரம் அறியப்பட்டு, துரித சேவை வழங்கப்படும்
- பயனாளர்கள் அவசர கால புகார்களை, படங்கள் மற்றும் குறுகிய அளவிலான வீடியோவை பதிவேற்றம் செய்து, புகாரைப் பதிவு செய்யலாம்.
- பயணம் மேற்கொள்ளும் போது, அவசர காலத்தில் பயனாளிகள், 'வாட்ஸ் ஆப், கூகுள் மேப்' வழியாக, நேரடி இருப்பிட விபரங்களை, நண்பர் அல்லது உறவினருடன் பரிமாறும் வசதி செய்யப்பட்டுள்ளது.
- இதன் வழியே பயனாளர்களின் உறவினர், நண்பர் வழியாக செல்லும் இருப்பிடம் அறியப்பட்டு, காவலர் விரைந்து செல்ல வழிவகை செய்யப்பட்டுள்ளது
- காவல் நிலைய இருப்பிடம் மற்றும் நேரடி அழைப்பு வசதி; கட்டுப்பாட்டு அறையின் தொலைபேசி விபரம்; இணைய வழி பொருளாதார குற்றம் தொடர்பான புகார்கள்; வாகன விபரம் அறிதல் மற்றும் போக்குவரத்து விதிமீறல் அபராதம் செலுத்தும் வசதியை பெறலாம்

## வேளாண் பொருள்களுக்கு 53 விமான நிலையங்களில் கட்டண சலுகை

### சுருக்கம்:



- கிருஷி உதான் திட்டம் ஆகஸ்ட் 2020–ல் சர்வதேச மற்றும் தேசிய வழித்தடங்களில் விவசாயப் பொருட்களைக் கொண்டு செல்வதில் விவசாயிகளுக்கு உதவுவதற்காகத் தொடங்கப்பட்டது.
- இந்த திட்டத்தில் கீழ் கோவை விமான நிலையம் சேர்க்கப்பட்டுள்ளதால் புதிய அந்தஸ்து பெற்றுள்ளன

### முக்கிய சிறப்பம்சங்கள்:

- கிருஷி உதான் திட்டம் ஆகஸ்ட் 2020–ல் சர்வதேச மற்றும் தேசிய வழித்தடங்களில் விவசாயப் பொருட்களைக் கொண்டு செல்வதில் விவசாயிகளுக்கு உதவுவதற்காகத் தொடங்கப்பட்டது.
- க்ரிஷி உதான் திட்டம் 2.0 அக்டோபர் 2021–ல் அறிவிக்கப்பட்டது. இந்த திட்டம் தற்போதுள்ள ஏற்பாடுகளை மேம்படுத்துகிறது,
- முக்கியமாக மலைப்பகுதிகள், வடகிழக்கு மாநிலங்கள் மற்றும் பழங்குடியினர் பகுதிகளில் இருந்து அழிந்துபோகும் உணவுப் பொருட்களைக் கொண்டு செல்வதில் கவனம் செலுத்துகிறது.
- அகர்தலா, அகட்டி, பாரபானி, டேராடூன், திப்ருகார், திமாபூர், கக்கல், இம்பால், ஜம்மு, ஜோர்ஹாட், குலு (புந்தர்), லே, லெங்புய், விலாபரி, பாக்யோங், பந்த்நகர், பித்தோராகர், போர்ட் பிளேர், ராய்ப்பூர், ராஞ்சி, ரூப்சி, சிம்லா, சில்சார், ஸ்ரீநகர் மற்றும் டெசு போன்ற வடகிழக்கு பிராந்தியத்தில் உள்ள 25 விமான நிலையங்களில், மலைப்பகுதி மற்றும் பழங்குடியினர் பகுதியில் முதன்மையாக இந்தத் திட்டம் கவனம் செலுத்தப்பட்டது.
- இந்த நிலையில், கிருஷி உதான் திட்டத்தின் கீழ் 53 விமான நிலையங்கள் சேர்க்கப்பட்டுள்ளன என்று சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சகத்தின் இணை அமைச்சர் வி.கே.சிங் தெரிவித்தார்.
- இந்திய விமான நிலையங்கள் ஆணையம் 28 விமான நிலையங்களுக்கு இந்த திட்டத்தை விரிவுபடுத்தியுள்ளது தெரியவந்துள்ளது.
- அடம்பூர் (ஜலந்தர்), ஆக்ரா, அமிர்தசரஸ், பாக்டோக்ரா, பரேலி, புஜ், சண்டிகர், கோயம்புத்தூர், கோவா, கோரக்பூர், ஹிண்டன், இந்தூர், ஜெய்சல்மர், ஜாம்நகர், ஜோத்பூர், கான்பூர் (சகேரி), கொல்கத்தா, நாசிக் , பதான்கோட், பாட்னா, பிரயாக்ராஜ், புனே, ராஜ்கோட், தேஜ்பூர், திருச்சி, திருவனந்தபுரம், வாரணாசி மற்றும் விசாகப்பட்டினம் ஆகிய விமான நிலையங்கள் இத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

## இந்திய மாநிலம் நாட்டிலேயே குறைந்த வேலையின்மை விகிதம்

### சுருக்கம்:




- கிழக்கு–மத்திய பகுதியில் அமைந்துள்ள இந்திய மாநிலமான சத்தீஸ்கர், நாட்டின் மிகக் குறைந்த வேலையின்மை விகிதத்தைக் கொண்டுள்ளது.
- அரசாங்கத் தரவுகளின்படி இது 32.19 மில்லியன் மக்கள்தொகையைக் கொண்டிருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது, இதில் கோண்ட், கன்வார் மற்றும் உரான் போன்ற பழங்குடியினர் 30.6% ஆவர்.

### முக்கிய சிறப்பம்சங்கள்:

- கடந்த சில ஆண்டுகளாக, மாநில அரசு தனது இளைஞர்களுக்காக பல வேலைத் திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளது. இது, மத்திய அரசின் மகாத்மா காந்தி தேசிய ஊரக

வேலை உறுதிச் சட்டத்திற்கு (MGNREGA) இணங்குவதாக, ஒரு சுதந்திரமான சிந்தனைக் குழுவான இந்தியப் பொருளாதார கண்காணிப்பு மையம் (CMIE) தெரிவித்துள்ளது.

- ❖ இந்தியாவின் ஒட்டுமொத்த வேலையின்மை விகிதம் 7.8% ஆக இருந்தாலும், இந்த ஆண்டு மார்ச் மாதத்திற்குள் சத்தீஸ்கரின் வேலையின்மை விகிதத்தை 0.6% ஆகக் குறைக்க இந்தத் திட்டங்கள் உதவியதாகத் தெரிகிறது.
- ❖ பொருளாதாரம், பொருளாதாரத்தை உயர்த்துதல் என்ற மேலோட்டமான நோக்கத்தின் கீழ், கோதன் நியாய யோஜனா, தேயிலை–காபி வாரியத்தின் அமைப்பு, மீன்வளம் மற்றும் விவசாயத்தின் சம அந்தஸ்து, தினை மிஷன் போன்ற திட்டங்களை செயல்படுத்துவதன் மூலம் புதிய வேலை வாய்ப்புகளை மாநில அரசு உருவாக்கியுள்ளது.
- ❖ வணிகத் தோட்டம்," என்று ராய்பூரில் உள்ள இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆஃப் மேனேஜ்மென்ட்டின் மூத்த ஆசிரியர் சஞ்சீவ் பிரஷர், கடந்த மாதம் தி டைம்ஸ் ஆஃப் இந்தியா செய்தித்தாளில் எழுதினார்.
- ❖ மறுபுறம், ஹரியானா 26.7% இல் முதலிடத்திலும், ராஜஸ்தான் (25%), ஜம்மு மற்றும் காஷ்மீர் (25%), மற்றும் ஜார்கண்ட் (14.5%) தொடர்ந்து உள்ளன.
- ❖ இந்தியாவின் ஒட்டுமொத்த தேசிய வேலையின்மை விகிதம் 2020 இல் கோவிட் –19 தொற்றுநோயின் முதல் அலையின் போது கடுமையாக உயர்ந்தது, பூட்டுதல்கள் மற்றும் பொருளாதார செயல்பாடுகள் குறைக்கப்பட்டன.
- ❖ இது நகர்ப்புறங்களில் (மார்ச் மாதத்தில் 8.6%) கிராமப்புறங்களில் (7.3%) அதிகமாக இருந்தது. இது வேலை வாய்ப்புகள் இல்லாமை, அதிக வேலைக்கு அமர்த்துவதற்கு முதலாளிகளின் தயக்கம் மற்றும் நெரிசலான பகுதிகளில் உள்ள தொழிலாளர்களிடையே அதிகரித்த இடர் வெறுப்பு காரணமாக இருக்கலாம் என நிபுணர்கள் கூறுகின்றனர்.
- ❖ தவிர, இந்தியாவில் நகர்ப்புற தொழிலாளர்களுக்கு MNREGA போன்ற திட்டங்கள் எதுவும் இல்லை.

# விருதுகள்

## கிராமி விருது வென்ற இந்தியர் விருது

### சுருக்கம்:

- ❖ இந்தியாவைச் சேர்ந்த இசைக் கலைஞர் ரிக்கி கெஜ், இந்திய வம்சாவளியைச் சேர்ந்த அமெரிக்க எழுத்தாளர், நீலா வாஸ்வானி ஆகியோருக்கு 'கிராமி' விருது கிடைத்து உள்ளது.
- ❖ அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் சிறந்த இசைக்கான 57வது ஆண்டு கிராமி விருது வழங்கும் விழா நேற்று நடைபெற்றது.



### முக்கிய சிறப்பம்சங்கள்:

- ❖ அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் சிறந்த இசைக்கான 57வது ஆண்டு கிராமி விருது வழங்கும் விழா நேற்று நடைபெற்றது.
- ❖ மொத்தம் 88 பிரிவுகளின் கீழ் விருதுகள் வழங்கப்பட்டன. அவற்றில் புதுயுக இசைப் பிரிவில் ரிக்கி கெஜ், தென்னாப்ரிக்க புல்லாங்குழல் கலைஞர் வவ்டர் கெல்லர் மேன் உடன் இணைந்து தயாரித்த 'விண்ட்ஸ் ஆப் சம்சாரா' என்ற ஆல்பம் கிராமி விருதை தட்டிச் சென்றது.
- ❖ இது, ரிக்கியின், 14வது இசை ஆல்பம். பெங்களுரைச் சேர்ந்த ரிக்கி கெஜ், பல கன்னட படங்களுக்கு இசை அமைத்துள்ளார்.
- ❖ சிறந்த குழந்தைகள் இசைக்கான பிரிவில் நீலா வாஸ்வானியின், 'ஐ ஆம் மலாலா' கிராமி விருது வென்றது.

- இதே பெயரில் வெளிவந்த தன் புத்தகத்தை இசையுடன் கூடிய உரைநடை வடிவில் நீலா வாஸ்வானி மாற்றி அமைத்திருந்தார்.
- சிந்தி தந்தைக்கும், ஐரிஷ் – அமெரிக்க தாய்க்கும் பிறந்த நீலா, பல நூல்களை வெளியிட்டுள்ளார்.
- கிராமி விருதுக்கு பரிந்துரைக்கப்பட்ட மறைந்த சிதார் இசைக் கலைஞர் ரவி சங்கரின் மகள் அனுஷ்கா சங்கரின் 'டிரேசஸ் ஆப் யு' இசை ஆல்பம், விருது பெறும் வாய்ப்பை இழந்தது.

# நியமனம்

## புதிய வெளியுறவு செயலாளர் – வினய் மோகன் குவாத்ரா நியமனம்

### சுருக்கம்:



- புதிய வெளியுறவு செயலாளராக வினய் மோகன் குவாத்ரா நியமனம் செய்யப்பட்டுள்ளார். தற்போது நேபாளத்திற்கான இந்திய தூதராக வினய் மோகன் குவாத்ரா உள்ளார்.
- மத்திய வெளியுறவுத்துறை செயலாளராக தற்போது ஹர்ஷ்வர்தன் ஷிரீங்கலா பணியாற்றி வரும் நிலையில், வரும் ஏப்ரல் 30–ஆம் தேதியுடன் அவர் ஓய்வு பெறுகிறார். இதனையடுத்து, தற்போது புதிய வெளியுறவுத்துறை செயலாளரை மத்திய அரசு நியமித்துள்ளது.

### முக்கிய சிறப்பம்சங்கள்:

- 30ல் பொறுப்பேற்கிறார்.கடந்த 1988ல் இந்திய வெளியுறவு பணியில் சேர்ந்த வினய் மோகன், 2017 – 2020 வரை பிரான்சு நாட்டின் இந்திய தூதராக பதவி வகித்தார்
- .வெளியுறவுப் பணியில் 32 ஆண்டுகள் அனுபவம் கொண்ட இவர், 2015 – 2017 வரை பிரதமர் அலுவலக இணைச் செயலராகவும் பணி புரிந்துள்ளார்.
- மத்திய வெளியுறவுத்துறை செயலராக தற்போது ஹர்ஷ்வர்தன் ஷிரீங்கலா பணியாற்றி வரும் நிலையில், வரும் ஏப்ரல் 30–ஆம் தேதியுடன் அவர் ஓய்வு பெறுகிறார்.
- தற்போது புதிய வெளியுறவுத்துறை செயலாளரை மத்திய அரசு நியமித்துள்ளது.
- இந்திய வெளியுறவுத்துறையின் புதிய செயலாளராக வினய் மோகன் குவாத்ரா நியமிக்கப்பட்டுள்ளார்.
- நேபாளம் நாட்டிற்கான இந்திய தூதராக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# விளையாட்டு

## வாகை சூடி வரலாறு படைத்தார் கார்ஃபியா

### சுருக்கம்:



- அமெரிக்காவில் நடைபெற்ற மியாமி ஓபன் டென்னிஸ் போட்டியில் ஆடவர் ஒற்றைய பிரிவில் ஸ்பெயின் வீரர் கார்லோஸ் அல்கராஸ் கார்ஃபியா சாம்பியன் ஆனார்
- இளம் டென்னிஸ் வீரர் பெறும் முதல் பிரதான சாம்பியன் பட்டமாகும். போட்டித்தரவரிசையில் 14–ஆவது இடத்திலிருந்த கார்ஃபியா
- இறுதிச்சுற்றில் 7–5, 6–4 என்ற நேர் செட்களில் போட்டித்தரவரிசையில் 6–ஆவது இடத்திலிருந்த நார்வே வீரர் காஸ்பர் ரூடை தோற்கடித்தார்

### முக்கிய சிறப்பம்சங்கள்:

- கோப்பை வென்றிருக்கும் கார்ஃபியா, மியாமி ஓபன் போட்டியில் சாம்பியன் ஆகிய மிக இளவயது வீரர் என்ற சாதனையைப் படைத்துள்ளார்.
- அடுத்த மாதம் 19–ஆவது வயதை எட்டும் கார்ஃபியா இந்தப் போட்டியில் காலிறுதிச்சுற்றைத் தவிர அனைத்து சுற்றுகளிலும் நேர் செட்களில் வெற்றியை பதிவு செய்துள்ளார்.
- அந்தச் சுற்றில் செர்பியாவின் மியோமிர் கெச்மனோவிச்சிடம் மட்டும் ஒரு செட்டை இழந்தார்.
- இந்தப் போட்டியில் சாம்பியன் ஆனதை அடுத்து கார்ஃபியா தனது முன்மாதிரியாகக் கொண்டிருக்கும் அவரது நாட்டைச் சேர்ந்த நட்சத்திர டென்னிஸ் வீரரான ரஃபேல் நடாலிடம் இருந்து அவருக்கு முதலில் வாழ்த்து கிடைத்தது குறிப்பிடத்தக்கது.
- அதையடுத்து ஸ்பெயின் அரசரான 4–ஆம் ஃபிலிப்பும் அவருக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்
- மகளிர் இரட்டையர் மியாமி ஓபன் மகளிர் இரட்டையர் பிரிவில் ரஷியாவின் வெரா ஸ்வோனாரெவா